

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • நவம்பர் 2, 2019 Weekly E-paper • NOVEMBER 2, 2019



# ராஜிவ் மல்ஹோத்ராவும் ‘தோழர்’ மணியரசனும்

• சுப. வீரபாண்டியன்



## பலியான குழந்தை

மா.உதயகுமார்

## இந்திய ஒற்றுமை...?

தலையங்கம்




## திராவிட இயக்கம் வளர்த்த தமிழ்

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • நவம்பர் 2, 2019 Weekly E-paper • NOVEMBER 2, 2019


# ராஜிவ் மல்ஹோத்ராவும் 'தோழர்' மணியரசனும்

● சுப. வீரபாண்டியன்





இரண்டு நாள்களுக்கு முன்பு (28.10.23019) Infinity Foundation என்னும் வலையொளியில், பெங்களூரு ஐ.ஐ.எம். நிறுவனத்தில் பணியாற்றும் பேராசிரியர் வைத்தியநாத அய்யரிடம், ராஜிவ் மல்ஹோத்ரா நேர்காணல் செய்யும் நிகழ்ச்சி வெளியாகியுள்ளது. திராவிட இயக்கம் என்னும் 'ஆபத்தை'ப் பற்றி அவர்கள் இருவரும் கவலையோடு பேசிக்கொள்ளும் காணொளி அது!

திராவிட இயக்கமும், தந்தை பெரியாரும், தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும் எதிரானவர்கள் என்பதாகத் தோழர் மணியரசனும் தொடர்ந்து பல வலையொளிக் காட்சிகளில் பேசி வருகின்றார்.

இரண்டும் திராவிட இயக்க எதிர்ப்பு என்னும் ஒரு புள்ளியில் சந்திக்கின்றன. ஆனால் வேறு வேறு கோணங்களிலிருந்தும், வேறு வேறு உத்திகளைக் கையாண்டும் அவை சொல்லப்பட்டுள்ளன.

முதலில் மல்ஹோத்ரா வைத்தியநாத ஐயரைப் பார்த்துவிடுவோம்.

ராஜிவ் மல்ஹோத்ரா தன் 45 ஆவது வயதிலே விருப்ப ஓய்வு பெற்று, முழு நேரமாக, இந்து-சமஸ்கிருதம்-இந்திய மேம் பாட்டிற்கு வேலை செய்யத் தொடங்கியவர். 1995 ஆம் ஆண்டு இந்த 'இன்பினிட்டி பவுன்டேஷன்' அமைப்பை நிறுவினார். அந்நிறுவனத்திற்கு, அமெரிக்காவில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகம் உள்ளிட்ட, உலக அளவிலான பல தொடர்புகள் உள்ளன. இதுவரையில், அந்நிறுவனம் 400க்கும் மேற்பட்ட மானிய நிதி உதவிகளைப் பெற்றுள்ளது. ஆனால் அங்கு, ராஜிவ் மல்ஹோத்ரா மட்டுமே ஒரே ஒரு முழு நேர ஊழியர். 2011 ஆம் ஆண்டு, திராவிட இயக்கத்தைத் தேச விரோத இயக்கமாகக் காட்டி, 'உடையும் இந்தியா' (Breaking India) என்ற நூலை எழுதியவர். அந்நூலுக்கான மறுப்புக் கூட்டமும், நூல் வெளியீடும், சென்னை, பெரியார் திடலில் நடந்தது பலருக்கும் நினைவிருக் கலாம்.

பேரா. வைத்தியநாதன், பெங்களூரு ஐ.ஐ.எம். நிறுவனத்தில் பொருளியல் பேராசிரியர். தஞ்சையில் உள்ள சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தில் வருகைதரு பேராசிரியர். இவரைப் புகழ்ந்து மறைந்த சோ இராமசாமி எழுதியுள்ளார் என்பதே இவர் யார் என்பதற்கான சான்றாக அமையும்.

இந்த நேர்காணலில், ஆங்கிலேயர் நிதி உதவியுடன் நீதிக்கட்சி தொடங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. 'இந்தியாவுக்கும், பிராமணர்களுக்கும் எதிராக ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்ட பிரித்தாளும் சூழ்ச்சியே திராவிட இயக்கம் என்பதான கருத்தை இவர்கள் முன்வைக்கின்றனர். வடநாட்டில் இந்துக்களுக்கு எதிராக முஸ்லிம்கள் தூண்டிவிடப்பட்டதைப் போல, தமிழகத்தில் திராவிட இயக்கம் உருவாக்கப்பட்டது என்பதே இவர்கள் சொல்லவரும் செய்தி.

அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் வரும் நிதியைக் கொண்டு நிறுவனம் நடத்தி, எந்த ஆங்கிலத்தை எதிர்த்துப் பரப்புரை செய்கின்றனரோ அதே ஆங்கிலத்தில் உரையாடி, திராவிட இயக்கத்தை ஒழித்து விடவேண்டும் என்று முயற்சி செய்து வருகின்றனர். இந்தியாவையும், இந்து மதத்தையும் எதிர்க்கும் திராவிட இயக்கத்தை எதிர்ப்பதாக இவர்கள் சொல்கின்றனர்.

இந்தியாவையும், இந்து மதத்தையும் தாங்களும் எதிர்ப்பதாகக் கூறிக்கொள்ளும் தோழர் மணியரசனும், திராவிட இயக்கத்தை மிகக் கடுமையாக எதிர்க்கிறார். திராவிடத்தை எதிர்ப்பதற்காகவே இவர் 'நேர்ந்துவிடப் பட்டுள்ளது' போலத் தெரிகிறது. (யாரால் என்பதைக் காலம் விரைவில் சொல்லும்).

தொடர்ச்சி மறுபக்கம்...

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## ...முன்பக்கத் தொடர்ச்சி

இவருடைய புதிய கோட்பாடு, "திராவிடம் என்பது பார்ப்பனியத்தின் இளைய பங்காளி" என்பது! காலமெல்லாம் பார்ப்பனியத்தை எதிர்த்த திராவிடம், அதன் பங்காளி என்று கண்டறிந்த விஞ் ஞானி இவர்.

இப்போது தோழர் மணியாரசனிடம் கேட்பதற்கு நம்மிடம் இரண்டு வினாக்கள் இருக்கின்றன. ராஜிவ் மல்ஹோத்ரா, வைத்தியநாதன், ஹெச்.ராஜா, எஸ்.வி.சேகர் ஆகிய பார்ப்பனர்கள் எல்லோரும் தங்கள் பங்காளியை எதிர்த்துத்தான் போரிட்டுக் கொண்டிருக்கிறார்களா? அதற்காகத்தான் திராவிட இயக்கத்தின் மீது இவ்வளவு கடுமையான தாக்குதல்களைத் தொடுக்கின்றார்களா?

இன்னொரு கேள்வி, திராவிடத்தை நீங்கள் எதிர்ப்பது போல, உங்கள் கட்சியில் மன்னிக்கவும், "பேரியக்கத்தில்!" உங்களுக்கு அடுத்த இடத்தில் உள்ள தோழர் வெங்கட்ராமன் எதிர்ப்பதில்லையே, ஏன்? திராவிடம் அவருடைய இளைய பங்காளி என்பதாலா? அல்லது அவர் நேரடியாக எதிர்த்தால், பூனைக்குட்டி வெளியில் வந்துவிடும் என்பதாலா? உண்மையில் வெங்கட்ராமன்தான் பேசுகிறார், மணியரசன் வாயசைக்கிறார் என்னும் குற்றச்சாற்றை நீங்கள் அறிவீர்களா? அப்படி, 'நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்' என்று எதார்த்தம் இருப்பதாகச் சொல்லப்படுவதை மறுப்பதற்காகவேனும், வெங்கட்ராமன் திராவிடத்தை எதிர்த்து நேரடியாகப் பேசுவாரா? உங்கள் கட்சிக் கொள்கைதானே அது? நெஞ்சில் கள்ளம் இல்லையென்றால், அவரும் நேரடியாகப் பேச வேண்டும்தானே! பேசாவிடில், அது கள்ள மௌனம் என்று ஆகி விடாதா?

பிராமணர்களுக்கும், இந்தியாவிற்கும் எதிரான இயக்கம் என்பதால் திராவிட இயக்கத்தை எதிர்க்க வேண்டும் என்று அவாள் பேசுவார்கள். பிராமணர்களுக்கும், இந்தியாவிற்கும் ஆதரவான இயக்கம் என்பதால், திராவிட இயக்கத்தை எதிர்க்க வேண்டும் என்று இவாள் பேசுவார்கள். அதாவது இது ஒரு கத்திரிக்கோல் உத்தி.

ஈழச் சிக்கலிலும் இப்படித்தானே நடந்தது! கலைஞரும், திமுகவும் ஈழ மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிரானவர்கள் என்று ஒரு பக்கம் பரப்புரை நடந்தது. விடுதலைப் புலிகளுக்கு மறைமுகமாக உதவுகின்றனர் என்று சொல்லி, திமுக ஆட்சி மறுபுறம் கலைக்கப்பட்டது. இதே கத்திரிக்கோல் உத்திதான் இப்போது மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. கத்திரிக்கோலில் இரண்டு கத்திகள் இருக்கும். இரண்டும் நேர் எதிர்த் திசைகளில் செயல்படும். ஆனால் இரண்டையும் ஒரே கைதான் இயக்கும்.

இது ஒரு மோசமான வலைப்பின்னல். அவரகள் திராவிடம் என்னும் பெயரை எதிர்க்கவில்லை. பெயரில் ஒன்றுமில்லை என்பது அவர்களுக்கும் தெரியும். எனினும் அது ஒரு குறியீட்டுச் சொல். சமூக நீதிக்கான குறியீட்டுச் சொல். அது நாட்டில் வேரூன்றி நிற்கும் வரையில் பார்ப்பனியம் எழ முடியாது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எனவேதான், திராவிடத்தைப் பல்வேறு முனைகளிலிருந்தும் குறிவைத்துத் தாக்குகின்றனர்.

ஆம், திராவிடத்தை அழிக்க வேண்டும், திமுக வை ஆட்சிக்கு வந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து வேலை செய்யும் ராஜிவ் மல்ஹோத்ரா, வைத்தியநாதன், ஹெச். ராஜா, எஸ்.வி.சேகர், மணியரசன், சீமான் ஆகிய அனைவருக்கும் பெயர்கள் மட்டுமே வேறு வேறாக உள்ளன ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## இந்திய ஒற்றுமை...?

தேசிய ஒற்றுமை தினம் என்றும், இந்தியாவின் ஒற்றுமை விழாவைக் கொண்டாடுவோம் என்றும், மத்திய அரசு ஒரு விளம்பரத்தை நாளிதழ்களில் வெளியிட்டுள்ளது.

அந்த விளம்பரத்தில் "இந்தியாவின் ஒற்றுமைக்கான ஓட்டத்தில் ஒட்டு மொத்த தேசமும் பங்கேற்க உள்ளது" என்ற வரிகளுக்குப் பின்னர் "ஒரே இந்தியா, உன்னத இந்தியா உருவாக" என்று முடிகிறது.

இந்தியாவின் ஒற்றுமை என்று சொல்லிவிட்டு, பின்னர் ஒரே இந்தியா என்று சொல்லுவதில் முரண் இருக்கிறது.

பல்வேறு மாநிலங்கள், அவைகளில் பல்வேறு மொழிகள் பேசும் மக்கள், அவர்களிடையே காணப்படும் வெவ்வேறு பண்பாட்டுக் கூறுகள் இருக்கும் பெரும் நிலப்பரப்பு இந்தியா.

இந்த வெவ்வேறு மாநில மக்களின் மொழிகள் உட்பட அவர்களின் அனைத்து உரிமைகளும் பாதிக்கப்படாத வகையில், அவர்களின் ஒற்றுமையைப் பேணுவதுதான் தேசிய ஒற்றுமை, இந்தியாவின் ஒற்றுமை.

மாறாக, மேலே சொன்ன வெவ்வேறு மாநில மக்களின் மொழிகளை ஏறத்தாழ ஒழிப்பதைப் போல பின்தள்ளி, சமஸ்கிருத மொழியை ஆட்சி மொழியாக்கி 'ஒரே இந்தியா' என்று சொல்லும்பொழுது அங்கே ஒற்றுமை என்ற சொல்லே அற்று வீழ்கிறது.

இன்னொரு பக்கம் அரசியல் சட்டப்பிரிவு 370ஐ வழங்கி, தனி உரிமையோடு இருந்த ஜம்மு காஷ்மீரில் அச்சிறப்பு சட்டத்தை ரத்து செய்தது மத்திய அரசு.

ஊரடங்குச் சட்டம், நெருக்கடி நிலை, தலைவர்கள் சிறை வைப்பு, அடக்கு முறை என முற்றிலும் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது காஷ்மீர்.

இப்பொழுது அந்த மாநிலச் சட்டசபையைக் கூட கலந்து பேசாமல் அம்மாநிலம் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டு விட்டன. இந்திய மத்திய அரசின் இத்தகைய நடவடிக்கையை இந்தியாவின் ஒற்றுமை என்று எப்படிக் கூறமுடியும்?

மத்திய பாஜக அரசுக்கு எதிராகப் பேசும் எழுத்தாளர்கள் கொல்லப்படுகிறார்கள்.

மாட்டிறைச்சியை உணவாகக் கொள்ளும் தாழ்த்தப்பட்ட, முஸ்லீம் சிறுபான்மையின மக்கள் தாக்கப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள்.

காவிரி வேளாண் நில மக்கள் தண்ணீருக்காகப் போராடுகிறார்கள். நிலங்கள் வறண்டு போகின்றன.

ஆனால், கர்நாடக மாநில பாஜக அரசு தண்ணீர் தர மறுக்கிறது. தமிழக மக்களின் கண்ணீர் மத்திய ஆட்சியாளர்கள் கண்களில் படவில்லை.

இப்படிப் பல்வேறு முரண்கள் இருக்கும் நிலையில் இந்தியாவின் ஒற்றுமை என்பது கேள்விக்குறியாகிறது.

சரியாகச் சொன்னால் ஒரே மொழி, ஒரே இந்தியா என்பதுதான்இந்தியாவின் ஒற்றுமையைச் சீர்குலைக்கிறது என்பதை மத்திய அரசு உணர வேண்டும்.

# அறியாமை இருளில் பலியான குழந்தை

● மா.உதயகுமார்

மதியால் இயங்காமல், மதத்தால் இயங்கும் சமூகத்தில், அறிவியலை முதன்மைப்படுத்தாமல் ஆன்மிகத்தை முதன்மைப் படுத்தும் சமூகத்தில், பகுத்தறிவை வளர்க்காமல் பக்தியை வளர்க்கும் சமூகத்தில் கோரவிபத்துகள்தான் நடக்கும். பத்தடி குழியில் விழுந்த குழந்தை சுர்ஜித், உடல் சிதைக்கப்பட்டு மீண்டும் குழிக்குள் புதைக்கப்பட்டிருக்கிறான். இதைத்தான் இந்தச் சமூகத்தால் அந்தக் குழந்தைக்குச் செய்ய முடிந்திருக்கிறது. தீயணைப்பு வீரர்கள், தேசிய / மாநிலப் பேரிடர் மீட்புக் குழுவினர், ஐஐடி குழுவினர், தன்னார்வக் குழுவினர் எனப் பலர் முயற்சித்தும் எதுவும் செய்யமுடியவில்லை. நான்கு நாள்கள் நடந்த மீட்புப் பணிகளில் என்ன திட்டமிடப்பட்டு அது எப்படிச் செயல் படுத்தப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கும் போது, நாம் தொழில்நுட்பத்திலும், திட்டமிடலிலும் எவ்வளவு பின் தங்கியிருக்கிறோம் என்பது விளங்குகிறது. இந்த நான்கு நாள்களிலும் நாம் நேரலையில் கண்டது இந்த நாட்டின் இயலாமையைத்தான்.






சுர்ஜித்

குழந்தைகளுக்குத்தான் பள்ளிகளில் தேர்வு வைப்பார்கள். இங்கு குழந்தையே பதவியில் இருப்போர்க்குத் தேர்வு வைத்திருக்கிறது. இவர்கள் எப்படித் தேர்வு எழுதினார்கள் என்பதைத்தான் இந்த நான்கு நாள்களும் நாம் நேரலையில் பார்த்தோம். எப்போதும் தேர்வைச் சரியாக எழுத முடியாமல் கோட்டை விடுபவர்கள்தான் தோற்றுப் போவார்கள். ஆனால் இங்கு நம்மவர்கள் கோட்டை விட்ட ஒவ்வொரு இடத்திலும் குழந்தைதான் குழிக்குள்போனது. இறுதியில் குழந்தையைக் கோட்டை விட்டோம். பொதுவாக, தேர்வில் யாரும் அடுத்தவர்களைப் பார்த்து எழுத அனுமதியில்லை. ஆனால் இங்குதான் அதுபோன்ற தடைகள் இல்லையே. அடுத்தவர்களை (அடுத்த நாட்டவர்களைப் பார்த்தாவது தேர்வில் இவர்கள் வெற்றி பெற்றிருக்கக்கூடாதா? நேரலையின் மூலம் மீட்புப் பணிகளைப் பார்த்த எல்லோரும்அதைத்தானே எதிர்பார்த்தோம்.

நாம் குழந்தைக்கு நிலவைக் காட்டினோம். அது இன்று நிலத்தைக் காட்டிச் சென்றிருக்கிறது. விண்ணைப் பார்க்கும் தொழில்நுட்பம் இனி மண்ணைப் பார்க்கட்டும்.

இந்தத் துன்பியல் நிகழ்வு, நாம் இனி எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைத் தெளிவாகக் காட்டியிருக்கிறது. இனியாவது இங்குள்ள ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் சட்டங்களை மதித்து, நீதிமன்ற ஆணைகளை மதித்துச் சரியாகச் செயல்பட வேண்டும். பேரிடர் மீட்புக்குழுவினர் தொழில்நுட்பக் கருவிகளாலும், தொழில்நுட்பப் பயிற்சிகளாலும் பலப்படுத்தப்பட வேண்டும். பரவலாக்கப்பட வேண்டும். இங்குள்ள அமைச்சரின் உறவினருக்குக் கிடைத்த இராணுவ ஹெலிகாப்டர், சாமானிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும். குறைந்தபட்சம் இது போன்ற நிகழ்வுகளின் போதாவது மீட்புக் குழுவினர் விரைந்து செல்ல இராணுவ ஹெலிகாப்டர் தயாராக இருக்க வேண்டும். மக்கள் போராட்டங்களைஅடக்குவதற்கு இராணுவம் அனுப்பப்படுகிறது. ஆனால் மக்களைக் காக்க இராணுவம் அனுப்பப்படுவதில்லை.

குழந்தையைக் காப்பாற்ற இங்குள்ளவர்களால் என்ன செய்ய முடிந்தது?அவர்களிடம் என்ன இருக்கிறது? இங்குள்ள மக்களால் பிரார்த்தனைதான் செய்ய முடிந்தது, தெருவுக்குத் தெரு கோவில்களும் வீட்டுக்கு வீடு பூஜை அறைகளும்தான் இருக்கின்றன. அறியாமை இருளில் இருக்கும் இந்தமக்களால் இதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? நமக்கு வேண்டியது தெருவுக்குத் தெரு கோவில்கள் அன்று. நூலகங்களும், முதலுதவி மையங்களும்தான்.


“மரணத்திலிருந்து பாடம் கற்கும் சமூகம் மடமைச் சமூகம்” என்று கவிப்பேரரசு வைரமுத்து சொன்னார். இது மடமைச் சமூகம் என்பதை உணரவைக்கத்தான் ஊடகங்களின் வெளிச்சத்தையெல்லாம் தன்மீது ஈர்த்து, இருளை நமக்குக் காட்டிச் சென்றிருக்கிறான் போலும் குழந்தை சுர்ஜித்.

சமூகத்திடம் இருந்து பாடம் கற்க வேண்டிய குழந்தை, சமூகத்திற்குப் பாடம் கற்பித்துச் சென்றிருக்கிறது. இன்று ஆழ்துளைக் கிணறுகள் அடைக்கப்படுகின்றன. இனி அடைக்கப்பட்டிருக்கும் நம் அறிவுக் கண் திறக்கப்படட்டும். ●

நூல் அறிமுகம்

# திராவிட இயக்கம் வளர்த்த தமிழ்

வெற்றிச்செல்வன்




“வரலாற்றின் பாதையில் மகத்தான தோற்றமான திராவிட இயக்கத்தின் மீது சேற்றை வாரி இறைக்கும் துரோக வேலைகளில் சிலர் இறங்கி இருக்கிறார்கள்.

இத்தகையவர்களை நமது இன எதிரிகள் தங்கள் வசம் உள்ள ஊடகங்களின் தோள் மீது ஏற்றிக் காட்டுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் ‘திராவிட இயக்கம் வளர்த்த தமிழ்’ எனும் அரிய கருவூலத்தைக் கொண்டு வந்துள்ளது பெரிதும் வரவேற்கத்தக்கதும் பாராட்டத்தக்கதும்ஆகும்”.

நூலின் அணிந்துரையில் ஆசிரியர் கி. வீரமணி அவர்களின் வரிகள் இவை.

தமிழ் வேறு, திராவிடம் வேறு என்றும், திராவிடம் தமிழுக்கு எதிரானது என்றும், காவிகளாலும், போலித் தமிழ்த் தேசியவாதிகளாலும் பல்வேறு வகையான புரட்டு வாதங்கள் முன்வைக்கப்பட்டு வரும் இன்றைய சூழலில், அத்தகைய வாதங்களுக்கெல்லாம் விடையளிக்கும் வகையில் இந்நூல் வெளிவந்துள்ளது.

தமிழ் மொழியின் வளர்ச்சியில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு குறித்து, ‘திராவிடம் வளர்த்த தமிழ்’ (பேராசிரியர் சுப. வீரபாண்டியன்) என்ற தலைப்பில் ஏற்கனவே நூல் வெளிவந்துள்ள நிலையில், இந்நூல் அவ்வரிசையில் மேலும் ஒரு நல்வரவு.

கவிதைத் தமிழ், மேடைத் தமிழ், உரைநடைத் தமிழ், இதழியல் தமிழ், புதினத் தமிழ், சிறுகதைத் தமிழ், நாடகத் தமிழ், திரைத் தமிழ், அறிவியல் தமிழ், ஆட்சித் தமிழ் என்னும் பத்து தலைப்புகளின்கீழ் திராவிட இயக்கம் வளர்த்த தமிழ் குறித்த செய்திகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

நூலின் தொடக்கத்தில் அமைந்த இரு கட்டுரைகள் திராவிடக் கருத்தியலின் அடிப்படை குறித்தும், தற்போதைய சூழலில் தலைதூக்கி வரும் சமஸ்கிருத ஆதிக்கப் போக்கு குறித்தும் தெளிவான பார்வையை முன்வைக்கின்றன.

தொடந்து வரும் தலைப்புகள், துறைவாரியாகத் தமிழ் வளர்ச்சியில் பங்காற்றியவர்கள் குறித்து விளக்குகின்றன.

ஒவ்வொரு துறையிலும் பலரால் அறியப்பட்ட ஆளுமைகளைப் பற்றி மட்டுமேயல்லாது, அதிக அறிமுகம் இல்லாதவர்களின் பங்களிப்பினைப் பற்றியும் பேசியிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தவுடன் தமிழ் வளர்ச்சிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், வெளியிடப்பட்ட அரசாணைகள் அனைத்தும் “ஆட்சித் தமிழ்” என்னும் தலைப்பின்கீழ் சான்றுகளோடு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

அது போல அறிவியல் துறையில் தமிழ் வளர்ச்சி குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள செய்திகள் பலரும் அறியாதவை.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், திராவிட இயக்க வரலாற்று நூல்களின் வரிசையில் இந்நூல் இன்னுமொரு மைல் கல். ●

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**
திருச்சி மாவட்டம்
நடத்தும்



**கருத்தரங்கம்**



நாள்: 02.11.19, சனிக்கிழமை
நேரம் மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை
இடம்: ரவி மினி ஹால், அறிவாலயம் அருகில், சத்திரம் பேருந்து நிலையம்.

தலைமை:
**தோழர் மணிவண்ணன்**

தொகுப்புரை:
**தோழர் பிரபுசிபி**

வரவேற்புரை:
**தோழர் வேலு நாச்சியார்**

முன்னிலை:
**தோழர்கள் தீனதயாளன், புலேந்திரன், பிரவீன்குமார், மீனாட்சி சுந்தரம், மதியழகன், சண்முகராஜ்**

சிறப்புரை:
**தோழர் சுப.வீரபாண்டியன்**
(பொதுச்செயலாளர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை)
**பகுத்தறிவைப் பரப்புவோம்**

**தோழர் புதுக்கோட்டை விஜயா**
(கொள்கை பரப்பு இணைச் செயலாளர், திமுக )
**ஆதிக்கம் தகர்ப்போம்**

**தோழர் வெற்றிவேல்-அறிவியல் அறிவோம்**
**தோழர் ஜெயபிரபா-தாய்மொழி காப்போம்**

நன்றியுரை:
தோழர் ராஜேஷ்

இப்படிக்கு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை, திருச்சி

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,